# இயேசு யார்?

பாடம் - 6

## மோட்சமும் நரகமும்

**சென்ற** பாடத்தில் சாத்தான் யாரென்றும், அவனையும் அவன் தந்திரங்களயையும் எதிர்த்து ஒரு விசுவாசி எப்படி வாழமுடியும்என்பதைக் கண்டோம். இப்பாடத்தில் கர்த்தராகிய இயேசு நமக்கு வாக்களித்துள்ள மோட்சத்தைக் குறித்தும், சாத்தானும் தேவனுக்குக் கீழ்ப்படியாத அநேகங்கோடி மக்களும் சேரப்போகிற நித்திய நரகத்தைக்குறித்தும் கற்றுக்கொள்வோம்.

### மோட்சம்

உலக தோற்றமுதல் தனது செயல்கள் அனைத்தையும் அறிந்த தேவன், தாம் தெரிந்துகொண்ட நீதியின்கிளையாகிய நமக்கு ஆயத்தம் செய்துவைத்துள்ள இடம்தான் மோட்சமாகும். மோட்சத்திற்குச் செல்லும்மனிதனுக்குப் புதிய ஆவிக்குரிய சரீரம் கிடைக்கும். தேவ கிருபை, ஒவ்வொருவரும் செய்துள்ள நீதியான செயல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சிறியதும், பெரியதுமான சரீரம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும். இந்த மோட்சத்தைக்குறித்து சத்தியவேதம் திட்டமும் தெளிவுமாய் கூறுகிற வசனங்களை வாசித்துப்பாருங்கள்.

1. மோட்சம் என்றும் பரலோகம் என்றும் அழைக்கப்படும் இடத்தில் தேவன் வசிக்கிறார். முற்றிலும் அவருடைய ஆளுகைக்குள்ளும் பரிசுத்த பிரசன்னத்துக்குள்ளும் இவ்விடம் இருப்பதால் நித்திய மகிழ்ச்சியோடு இருக்கும். மனந்திரும்புகிறஒவ்வொரு மனுஷனுக்கும் மிக அருகில் இந்த பரலோகராஜ்யம் இருக்கிறது. அதாவது அவனது ஆத்துமா பரலோகத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தைப்பெற அவன் மனந்திரும்புகிற வினாடியே தயாராகிவிடுகிறது. மனந்திரும்பி, பாவமன்னிப்பைப் பெறும்படியாக இயேசுவின்மேல் விசுவாசம் வைத்து, ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவனுடைய மாம்சம சரீரமானது, மரணம் என்ற திரையைக் கடந்த உடனேயே புதிய ஆவிக்குரிய சரீரத்தை அடைந்து தேவதூதர்களால் பரதீசு எனப்படும் இளைப்பாறும் இடத்திற்கு அழைத்துச்செல்லப்படுகிறது. இயேசுகிறிஸ்துவன் வருகையின் நாளில் அவர்கள் அவரோடு வந்து இவ்வுலகை ஆயிரம் ஆண்டுகள் ஆட்சி செய்தபின்னர், பரலோகத்திற்கு அழைத்துச்செல்லப்படுகிறார்கள். ( மத் 4.17 - 5.16 - 6.9 )

2. அது தேவதுாதர்களும், சந்தோஷமும் நிறைந்த இடம், நித்தியமானது. அங்கே அநேக வசிப்பதற்கேற்றஇடங்கள் உண்டு. அங்கே நவமான திராட்சரசம், ஜீவ விருட்சத்தின் கனி, அதிகாரம், நட்சத்திரம்,வெண் வஸ்திரம், சிம்மாசனம், மறைவான மன்னாவாகிய உணவு ஆகியவை யாவருக்கும் கொடுக்கப்படும். ( லுாக் 15. 7 - மத் 26.29 - யோ 14.2.3 - வெளி 2. 7.17.26.28 - 3.5.21 - 20.6)

3. அது உலகம் உண்டானதுமுதல் நீதிமான்களுக்காக ஆயத்தம் செய்யப்பட்ட இடமாகும் (மத்25.34).பூமியில் மனிதன் இருக்கும்போதே பரலோகத்தில் தனக்காக செல்வங்களைச் சேர்த்துவைக்க முடியும். (மத் 6.20 - லுாக் 12.33 )

4. மனத்தாழ்மையுடன் மனந்திரும்பி, இயேசுவை ஏற்றுக்கொண்டு, தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவர்களே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும். பரலோகத்தின் திறவுகோல்களை உடையவரும், பரலோகத்தின் வழியும், மாறாத சத்தியமும், நித்திய ஜீவனும், பரலோகத்தின் வாசலும் இயேசு ஒருவரே ( மத் 5.3.10 - 7.21 -18.3 - 19.14 - யோ 10.9 )

5. மிகச்சிலரே பரலோகத்திற்கும். அநேகமாயிரம்பேர் நரகத்திற்கும்தான் செல்வார்கள். இந்தச் சத்தியத்தை மறுப்பவர்கள் அநேகருண்டு. ஆனால் பரிசுத்த வேதாகமம் இதைத் திட்டமும் தெளிவுமாகக் கூறுகிறது. (மத் 7 . 13.14 -லுாக் 13.23.24 - சங் 49.14 )

மிகச்சிலருக்கே கிடைக்கும் இந்த அற்புதமான பாக்கியத்தைப்பெற நீங்களும் விரும்புவீர்கள். அதற்கு ஒரே வழி இயேசுவின் நாமத்தினாலே மனந்திரும்பி, அவரிடம் பாவமன்னிப்பைப்பெற்று, ஞானஸ்நான அடையாளத்தை நிறைவேற்றி, அவருடைய ஆவியினாலே நடத்தப்படும் பரிசுத்தமான வாழ்வு வாழ்வது மட்டும்தான். இந்தச் சத்தியத்தை மீண்டும் மீண்டும் இப்புத்தகத்தில் சொல்லப்படுவதற்குக் காரணம், இன்னும் மனந்திரும்பாத அநேகர், அடிப்படையான இந்தச் சத்தியங்களை மறந்து வேறு காரியங்களில் கவனம் செலுத்தி வருவதால்தான். இது மிகவும் எளிய (அநேகர்

நினைப்பதுபோல் மிகவும் கடினமானதல்ல) மகிழ்ச்சியான வாழ்க்கையாகும் (யோ 10.9 - 14.6 - 15.4.5 - வெளி 22.14 ). நாம் செய்யவேண்டியதெல்லாம் இயேசுவின்மேல் நம்பிக்கை வைத்து, பாவ அறிக்கை செய்து, அவருக்கு என்றென்றும் கீழ்ப்படிந்திருப்பது மட்டுமே. மற்றவற்றை அவரே பார்த்துக்கொள்வார். இந்தப் புத்தகத்தை வாசிக்கும் நீங்களும் நானும் பூமியில் ஒருவரையொருவர் காணாவிட்டாலும், பரலோகில் நமது பரிசுத்த தேவனுடைய நித்திய ராஜ்யத்தில் அவரோடு சந்தித்து மகிழுவோம். அல்லேலூயா.

## நரகம்

மோட்சத்திற்குச் செல்லாத அனைத்து மனிதர்களுமே கண்டிப்பாகத் தள்ளப்படும் இடம் நரகம் எனப்படும்.இவ்விரு இடங்களுக்கும் இடைப்பட்ட இடம் ஏதுமில்லை. இயேசுவின்மேல் நம்பிக்கை வைத்து பாவமன்னிப்பை அடையாத மனிதனின் பொன், வெள்ளி, செல்வங்கள், அவன் வணங்கிய விக்கிரகங்கள் ஆகிய எதுவும் அவனை நரகத்திற்குச் செல்வதிலிருந்து காப்பாற்றாது. வேதத்தை அறியாத, நம்பாத பலகோடி மக்கள் நரகத்தைக்குறித்தும் நம்புவதில்லை. அவர்கள் நம்பினாலும், நம்பாவிட்டாலும்கோடானுகோடி மக்கள் இழுத்துச்செல்லப்படும் இடம்தான் நரகம் என்பது. பரிசுத்த வேதாகமம் இதனை500 க்கும் மேற்பட்ட வசனங்களால் தெளிவுபடுத்துகிறது.

1) நரகம் என்பது இந்த பூமிக்குள் (தரைக்குக்கீழ்) இருக்கிற ஒரு இடமாகும். ( எபே 4:9 - சங் 6.5 - 30.3 -55.15 - எண் 16.33 - எசே 26.20 -31.8 -ஏசா 38.18 - உபா 32. 22 )

2. நரகம் என்பது பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஏற்படுத்தப்பட்ட இடமாகும். இயேசுவை ஏற்றுக்கொள்ளாமல் தொடர்ந்து தங்கள் பாவங்களில் வாழ்கிறவர்கள் அனைவருமே நரகத்தில் தள்ளப்படுவார்கள்.( மத் 25.41 -யூதா 1.16 - லூாக் 16.26)

3. நரகம் என்பது இருள், அணையாத அக்கினி, குழி, புழுக்கள், அழுகை ஆகியவை உள்ளதும், ஆறுதல் இல்லாததுமான இடம். (மத் 8.12.29 - 7.19 - வெளி 14.11)

4. நரகத்தில் தள்ளப்படுபவர்களுக்கும் ஒரு சரீரம் உண்டு (மத் 5.29 -18.8 )

5. நரகத்திற்குச் செல்கிறவர்கள் இவ்வுலகில் மரித்த உடனேயே, நியாயத்தீர்ப்புநாள்வரை காத்திராமல்நரகத்தில் தள்ளப்பட்டுவிடுகிறார்கள். ( லூக் 16.23)

6. நரகத்திலிருந்து யாரும் தப்பி ஓட முடியாது. நரகம் நித்தியமானது. கொஞ்சக்காலம் மாத்திரமல்ல. (மத் 25.41.46 - வெளி 14.11)

7. இயேசுவை ஏற்றுக்கொண்டு அவருடைய கிருபையாலே வாழும் யாருக்கும் நரகமில்லை. (யோ 3.18)

இப்படி நித்தியமான ஜீவமார்க்கத்தில் வாழாத எவரும், மனிதர்கள் மத்தியில் எவ்வளவுதான் நல்லவன் என்று பெயர் எடுத்திருந்தாலும், தப்ப முடியாத நரகத்திற்கே செல்வார்கள். இந்தக் கொடிய நரகத்திற்குத்தப்பவேண்டுமென்பதே நமது நோக்கமாயிருக்க வேண்டும்.

இந்தியாவில் பொதுவாக மனித வாழ்வின் முடிவைக்குறித்தும், பாவபுண்ணியங்களைக்குறித்தும், தெளிவற்றதும், குழப்பமானதும், தவறானதுமான கருத்துக்கள் நிலவுகிறது. மனித ஜென்மத்திற்கு அடுத்து அவன் நாயாக, புழு பூச்சியாக, பல பிறவிகள் எடுக்கவேண்டும் என்று ஒரு கருத்து உள்ளது. மற்றொன்று ஒரு குறிப்பிட்ட நாளில் மரணமடைந்தால் மோட்சத்திற்குச் சென்றுவிடலாமென்றும் (*அவனுடைய பாவ புண்ணியங்களைப்பற்றி ஒன்றுமில்லை*) கூறுகிறது. பலவித பூஜைகள், ஸ்நானங்கள், தான தருமங்கள் செய்வதன்மூலம் பாவங்கள் விலகிவிடுகின்றன (*பணக்காரர்கள் இவற்றை ஒரே வாரத்தில் செய்துவிட முடியும்*)என்றும் ஒரு கருத்து உண்டு.

ஆனால் சத்திய வேதாகமம் திட்டமும் தெளிவுமாக ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனிதனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது எனக்கூறுகிறது. மனிதன் தன்வாழ்நாளில் ஒருநாள் மனந்திரும்பி, இயேசுவின் நாமத்தினால் புதிய வாழ்க்கை வாழாதவரையில் அவன் என்ன செய்தாலும்( இயேசுவை வணங்குவதாலும், காணிக்கைகள் கொடுப்பதாலும்) நரகத்திற்குத் தப்ப முடியாது. மனிதன் செய்யும் புண்ணியங்களால். பாவங்களின் பலன்களைச் சரிக்கட்ட முடியாது.

எப்படியெனில், களைகள் நிறைந்த ஒரு நிலத்தில் அதைவிட அதிகமாக கோதுமையை விதைத்துவிட்டால்களைகள் அழிந்து கோதுமை விளைந்துவிடுமா என்றால், இல்லை. அதேபோல்தான் அநேக பாவங்கள் செய்துவிட்ட மனிதன், அதிகமான புண்ணியங்கள்

செய்துவிட்டாலும், பாவத்தின் பலன்கள்அவனைவிட்டுப்போய்விடாது. அதேசமயம் களைகளை முற்றிலும் அகற்றிவிட்டு, சிறிதளவு கோதுமை விதைத்தாலும் அது விளைந்து பலன்தரும். அதேபோல் பாவங்களின் பலன்கள் இயேசுவின் ரத்தத்தினால்மன்னிக்கப்பட்ட பின்னர் செய்யும் நற்காரியங்களுக்கு மட்டுமே பூரண பலன் உண்டு. பாவம் மன்னிக்கப்படாதமனிதனுக்குப் புண்ணியங்களால் பயனேதுமில்லை என்பதே சத்தியமானதாகும்.

இக்கொடிய நரகத்திற்குத் தப்பும் வழி என்ன?

1. இயேசுவை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல்மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்.(யோ 3. 18.36 - 5.24)

2. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். (அப் 16.31)

3. கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிறவர்களுக்குஆக்கினைத் தீர்ப்பில்லை.(ரோம 8.1)

ஜெபம் :- பரிசுத்த பிதாவே! நித்திய நரகத்தின் கொடிய வேதனைகளுக்குத்தப்பி, நான் உமது குமாரனாகிய இயேசுவின் வழியாக ஜீவனுக்குள் பிரவேசிக்க எனக்கு அருள்புரியும். ஆமென்.

1) **நரகம் இருப்பது உண்மை என்பதை வெளிப்படுத்தும் இயேசு சொன்ன வாக்கியங்கள் ஒன்றையாவது வேதாகமத்தில் தேடி எடுங்கள்.**

2) **நீங்கள் இந்த நித்திய நரகத்திலிருந்து தப்புவிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா?**

3) **நரகம் யாருக்காக ஏற்படுத்தப்பட்டது, யாரெல்லாம் அதில் பங்கடைகிறார்கள் என்பதைக் காட்டும் வேதவசனங்கள் ஐந்தை (மேலே கொடுக்கப்பட்டுள்ளது) வாசித்துப் பாருங்கள்.**

4) **மோட்சத்திலுள்ளவைகளில் உங்களுக்குப் மிகவும் பிடித்த அம்சம் என்ன?**

5) **மனித வாழ்வில் அவன் எடுக்கவேண்டிய மிகமிக முக்கியமான முயற்சி என்ன என்று கருதுகிறீர்கள்?**

அன்பார்ந்தவர்களே!

மேல்காணும் கேள்விகளுக்கான பதில்களை கீழ்காணும் அஞ்சல் அல்லது மின்னஞ்சலின் ஊடாக பதில் அளிக்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அஞ்சல் முகவரி: **J.K.JESUDOSS CHELLADURAI**
**604 Third Building,**
**Shanthi Park Appartments**
**Jayanagar 9 th Block**
**Bangalore -69**
**India**
மின்னஞ்சல் முகவரி: **jkjesudoss@yahoo.com**

## பாடங்கள்:


- இயேசு யார்
- இயேசுவின் தெய்வீகம்
- இரட்சிப்பின் வழி
- ஜெபமும் வேதவாசிப்பும்
- சாத்தானும் மனிதனும்
- மோட்சமும் நரகமும்
- ஞானஸ்நானமும், பரிசுத்த ஆவியானவரும்

- சுவிசேஷமும், விசுவாசியும்
- திருச்சபையும், சபைப்பிரிவுகளும்
- இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை

� copyright 1999-2017  TAMILCHRISTIAN.COM All rights reserved.